**பல்கலைக்கழக சேமலாப நிதியம் - 2017**

-----------------------------------------------------------------

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவு மற்றும் 2015 இன் 01 ஆம் இலக்க பல்கலைக்கழக சேமலாப நிதிய வழிகாட்டிநெறியின் 24 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

(i) நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 5,274,039,486 தொகையான அங்கத்தவர் கடன்களில் உள்ளடக்கப்பட்ட அடுத்த ஆண்டிற்குள் அறவிடப்பட வேண்டிய அங்கத்தவர் கடன் தொகையானது நியமத்தின் 76 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் இனங்காணப்பட்டுக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் ரூபா 1,739,700,000 பெறுமதியான திறைசேரி பிணைமுறி விற்பனையிலிருந்து உழைக்கப்பட்ட இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட்ட கழிவுகள் மற்றும் தவணைக் கட்டணங்களை வெளிப்படுத்தாமல் நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் பிணைமுறி விற்பனைகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 8,848,340 இலாபம் மாத்திரம் இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட அங்கத்தவர்களிற்கு வழங்கப்பட்ட சேமலாப கடன்களிற்காக அறவிடப்பட வேண்டிய நீண்டகாலக் கடன் மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 528,709,114 தொகை நியமத்தின் 25(உ) பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் பெறப்பட வேண்டிய கடன் தவணைப்பணங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியான ரூபா 18,879,390 தொகை கழிக்கப்பட்டு ரூபா 509,829,724 தேறிய தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் நடைமுறை வேலையில் ஏற்பட்ட மாற்றத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணனி சேவைகளை வழங்குவதற்கான சேவை உடன்படிக்கைகள் தொடர்பாக 2018 சனவரி தொடக்கம் யூன் 30 வரையான எதிர்காலத்திற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 171,810 சேவைக்கட்டணம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு திறைசேரிப் பிணைமுறிகளிற்காக மீளாய்வாண்டு தொடர்பாக பெறப்பட வேண்டிய வட்டி வருமானம் ரூபா 4,573,370 தொகையாக இருந்த போதிலும் அது கணக்குகளில் ரூபா 4,649,171 ஆக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ஆண்டின் பிணைமுறி வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் ரூபா 75,801 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) அடுத்த ஆண்டில் முதிர்வடைய வேண்டிய ரூபா 5,150 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்பு குறுங்கால முதலீடாக கருத்தில் கொள்ளப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் இது நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் நீண்டகால முதலீடாக காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க காசுப்பாய்ச்சல் கூற்றில் இது தொடர்பாக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

1982 பெப்ரவரி 02 ஆம் திகதிய 155(5) ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் உயர்கல்வி நிறுவனங்களில் சேவையாற்றி சேவை முடிவுறுத்தப்பட்ட ஊழியர்களின் சேமலாப நிதிய மீதியை விடுவிப்பதற்கு உரிய விபரங்கள் ஊழியர்கள் சேவை முடிவுறுத்தப்பட்டு 02 மாதங்களுக்குள் ஆணைக்குழவின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த உயர்கல்வி நிறுவனங்களின் தாமதங்களின் அடிப்படையில் சமர்ப்பிக்கத் தாமதம் ஏற்படுமாயின் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 95 ஆம் பிரிவின் பிரகாரம் பங்களிப்பாளர்களுக்கு வட்டி செலுத்த வேண்டி ஏற்படுமாயின் அவ் வட்டி அதற்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு மிகைக்கட்டணமாக விதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் தாமதக் காலம் 04 மாதங்கள் முதல் 20 மாதங்கள் வரை விரிவடைந்திருந்த போதிலும் அந்த தாமதக் காலத்திற்காக செலுத்தப்பட்ட வட்டி சுற்றறிக்கையின் பிரகாரம் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களில் மீளச் செலுத்த வேண்டிவைகளின் கீழ் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளாக காட்டப்பட்ட ரூபா 36,216,547 மீதியில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த சேமலாப நிதிய பயனாளிகளின் கொடுப்பனவுகளுக்குரிய ரூபா 35,544,619 பெறுமதியான 459 காசோலைகள் காணப்பட்டன. சேமலாப நிதிய பயனாளிகளின் அக்காசோலைகளில் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகை அறவீடு செய்யப்பட்டு மிகுதி தொகை உரிய பயனாளிகளிற்கு தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 3,041,807,362 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,792,617,408 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 249,189,954 முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது முதலீட்டு வருமானம் ரூபா 306,753,732 ஆல் அதிகரித்தமை மேற்படி முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகளில் சீரான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வருமான வரிக்கான சீராக்கங்களின் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 2,454,475,779 ஆக காணப்பட்ட பங்களிப்பு 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3,155,181,485 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### முகாமைத்துவச் செயற்பாடுகள்

காசுப் புத்தகத்தைப் பேணும் போது ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வரவு மீதிக்குப் பதிலாக செலவு மீதி அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக காசு தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | காசுப் புத்தகம் நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்படுதல் | காசுப் புத்தகம் நாளதுவரையாக்கப்பட்டிருக்காமை. |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |